REGD No. M. 4642

திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

T. N. Parang[illegible] News Agent

மலர் 10. | 29–7–51 | இதழ் Kulithalai

"நாம் பலர், அவர்கள் சிலர்"

அவர்களில் எவருமே உயிருட
ில்லை! அத்தனைப் பேரும் மடிந்து
ட்டனர்! மண்ணோடு மண்ணாகி
ட்டனர்!

மடிந்தனர்! மறைந்தனர்! ஆனால்
வர்கள் வாழ்ந்த பொழுது வழங்கிய
ொழி மட்டும் அழியாது பாதுகாக்கத்
ட்டமிடப்பட்டுள்ளது.

பேசியோர் இல்லை-பேசப் பட்ட
ொழி இருக்கிறது!

மடிந்த மக்கள்- எனினும் அவர்
ள் வாழ்விலே இருந்த மொழியை
அழியாது நிலைக்கச் செய்ய புதுமுறை
கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மாங்க்ஸ் என்ற மொழி பேசு
வோரில் இன்று எவருமே உயிருட
னில்லை.

இருந்தும் அவர்கள் மொழியை
இப்பொழுது கேட்க முடியும்!

இடிந்த கோட்டை, பாழான்
அகழ், கலமான மணி மண்டபம்,
சிதைந்த சிற்பங்கள், சீர் கெட்டுப்
போன சித்திரங்கள் என்று காண்
கிறோமே, அது போலவே பழயமொழி
மாங்க்ஸை கேட்கச்செய்திருக்கின்ற
னர்.

மாங்க்ஸ் மொழி மறைந்து விடா
திருக்க, 'ரிகார்டு' மூலம் அம்மொழி
யைக் கேட்கச் செய்யப்பட்டுள்ளது.

செத்த இனமானாலும், அவர்வழங்
கிய மொழி சாகாதிருக்க ஏற்பாடு
செய்துள்ளனர்.

இறந்த மொழிகளுக்கு இதுதான் இடம்! ஆனால் இந்திய பூமியிலே மட்டும், செத்த மொழிக்கு சீரும், சிறப்பும் தேடுவதிலே முனைந்துள்ளவர்கள், அம்மொழிக்கு இடம் 'ரிகார்டு' என்பதை மறந்துவிட்டு, அரியாசனம் அமைக்க ஆசை கொண்டு திரிகின்றனர்!

'ரிகார்டு' செய்து, காட்சி சாலைகளிலே, கேட்கச் செய்வதை விடுத்துவிட்டு, அதற்கு பன்னீர் தெளித்து, பரிமள கந்தம் பூசி பட்டு, பீதாம்பரம் உடுத்தி, பாலும் பழமும் ஊட்டி, பல்லக்கிலேற்றி, பராக்கு கூறி, பாராள வைக்கலாம் என்று ஆகாத ஆசையினால் அவதிப்படுகிறார்கள்!

எங்கள் சமஸ்கிருதம், செத்த மொழியென்று பேசுகின்றனரே, இவர்கள் நா அழுகிப் போகாதா! நாசகாலர்கள், தேவ மொழியையே நிந்திக்கிறார்கள்! இவர்கள் வாழ்வார்களா! என்று ஆயாசங் கலந்து பேசிடும் பொழுது, சிரிப்பதா, அழுவதா என்று புரியவில்லை.

வடமொழி, பேசும் மொழியல்ல! தேவரும், மூவரும் கேட்டமொழி, பூசை நேரத்தில்—பேசிய மொழியல்ல! இங்குள்ள பூதேவர்களும் நாவில்நடமிடவில்லை, அம்மொழியை! செத்த மொழியைத் தாங்குகிறார்கள், தர்ப்பையைக் கொண்டு! புரிநூலால், அம்மொழியைக் கட்டித் தூக்கி நிறுத்துகின்றனர்!

செத்த மொழிக்காக சல்லடங் கட்டுவோர் உண்டு, இங்கு. ஆனால் அவர்களுக்கு, மந்திரிமார்களும் துணை போகிறார்கள் என்றால்தான் நாம் அதுபற்றி நினைக்கவேண்டியிருக்கிறது!

எங்கோ, சில இடங்களில், அந்த மொழி சொந்தக்காரர்கள் பேசுவர். இந்த மந்திரிகளோ ஓடியோடிக் கலந்துகொள்கின்றனர்!

வடமொழியை வாழ்விக்க நாங்களிருக்கிறோம், பணம் தருகிறோம், பட்டாளந் தருகிறோம், பயப்பட வேண்டாம் என்று அவர்கள் கூறுவதும், அதைக் கேட்டு, பூதேவர் பரம்பரை பூரிப்பதும் வேடிக்கை!

வடமொழிக் கல்லூரி வைக்கிறோம் பாருங்கள் என்று அவர்கள் புலம்புவதும், இவர்கள் நல்ல காரியம், நாளையே செய்யுங்கள் என்று கூறுவதும் நமக்கு விந்தையாய்த் தானிருக்கிறது.

மாங்க்ஸ் மொழி பேசப்பட்ட மொழி. பேசிய மக்கள் மடிந்தனர். வடமொழியோ பேசப்பட்ட மொழியே அல்ல—அதற்கு இங்கு ஆராதனை செய்திடுவோர் இருக்கிறார்கள்—அவர்களுக்கு அனுசரணை செய்யும் அமைச்சர்களும் இருக்கிறார்கள்!

'ரிகார்டு'களோடு நிற்கவேண்டிய வடமொழி, இன்று கல்லூரிகளிலும், கலைக்கோயில்களிலும், மக்கள் வாழ்விலும், தாழ்விலும் வழங்க வேண்டும் என்று பிடிவாதம் செய்திடும் போக்கு, நாட்டோர் கண்டு நகைத்திடக் கூடியது!

* * *

இந் நாட்டில்தான் மொழிப் பிரச்சினை, மிகப் பயங்கர உருவெடுத்திட வேண்டிய நிலை இருந்தது.

வடமொழிக்கு, வக்கீலாகிறார்கள், அமைச்சர்கள்! அது மட்டுமா? இந்தி மொழிக்கு, ஏக வாரிசாகிறார்கள் அவர்கள்!

தமிழைத் தவிர பிற எம்மொழிக்கும், இந்த மதிமிக்க மந்திரிமார்கள் தாளங் கொட்டி, 'தத்திந்தோம்' ஆடி வரவேற்பர்.

இதைக் கண்டு மக்கள் சீறினால், சிரிப்பர், சிந்தனையின்றி! ஆம், அவர்கள்தான் நமக்கு மந்திரிகள்! என் செய்வது?

இந்தியை திணிக்க, காங்கிரஸ் ஆட்சி துணிந்தது!

தமிழகம் இந்த துணிகர அக்கிரமத்தை எதிர்த்தது!

இந்தியைக் கட்டாய பாடமாக்கக் கூடாது என்று அறப்போர் நடத்தினர். ஆட்சியாளர் அடிபணிந்தனர்.

கட்டாய பாடமென்றது, எங்கள் அறிவு எட்டாத நேரத்தில் போட்ட திட்டம், இதோ எடுத்து விட்டோம் என்றனர்.

இந்திக்கு, ஏற்றம் தரவில்லையென்று சர்க்கார் கூறியும், மக்களின் சீற்றம் குறையவில்லை. காங்கிரஸ் ஆட்சி கதி கலங்கியபடி, மக்கள் ஆத்திரத்தைப் போக்க வழி பார்த்தது.

இந்தியைத் தாழ்த்தியது மட்டுமல்ல, தமிழுக்கும் தொண்டு செய்கிறோம் நாங்கள் என்று சொன்னால்தான் மக்களின் முன்னால் வரமுடியும் என்று தெரிந்துகொண்டனர்.

அவினாசியாரின் 'விலாசம்' மக்களுக்குத் தெரிந்த நேரம் — அவர் நாளில் தமிழகத்தில், தமிழுக்குத் தொண்டு புரிகிறோம் என்று தமிழ் வளர்ச்சிக் கழகம் வைத்தனர்.

தமிழுக்கு, பெருமை தேடுவதற்காக, ஆஸ்தான கவி ஏற்படுத்துகிறோம் என்றனர்.

பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவிலேயே, தமிழில் பேசிக் காட்டினார், அவினாசியார்.

தமிழ் மொழி சீர்திருத்தக் குழு அமைத்து, எழுத்து சீர்திருத்தத்திற்கு வழி வகுத்தனர்.

அதன் முடிவு, அண்மையிலே வெளியிடப்பட்டது. நாம், அந்த நாள் முதல் சொல்லிவந்தபடி, தமிழ் எழுத்து சீர்திருத்த முடிவுகள் வெளிவந்துள்ளதைக் காண மகிழ்கிறோம்.

இவையெல்லாம், ஆட்சியாளர் முதலில் செய்த பெருங் குற்றத்திற்கு, கழுவாயாகவே செய்தனர்.

இந்தி, கட்டாயபாடம் என்று சொன்ன குற்றத்தைத் திருத்திக் கொண்டும், மக்கள் மன்றத்தில் மகிழ்ச்சி வரவழைக்க, இத்தனை வேலைகளையும் செய்தனர், இருந்தும், இன்று, மந்திரி மாதவமேனன் பேசுவது வியப்பாக இருக்கிறது!

இந்தி எதிர்ப்பு நடத்தியோர் சிலராம்! இந்தியை ஆதரித்தோர் பலராம்!

மலையாள மந்திரியார் உதிர்த்த மணிமொழிகள் இவை.

இந்தி எதிர்ப்பு நடத்தியோர் சிலராம் — மனந்துணிந்து சொல்கிறார்.

ஆயிரமாயிரம் காளைகள், தாய் மொழிக்காக, சிறைக்கதவை தட்டியிருக்கின்றனர்.

நம், செந்தமிழ் காத்த வீரர்களால் தான், சிறை விரிந்தது!

இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம், நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டவரே, என்று கூட்டம் கூட்டமாக, சிறைக் கோட்டம் சென்றனர்.

உலகமே, காணாத விந்தை! சிறையிலே ஏணைகள் தொங்கின. ஆம், தமிழகத்தாய் மார்கள் சிறை சென்றனர்.

சிறையை, சிங்காரச் சோலையாக மாற்றினர்!

தாளமுத்து, நடராசன் பிணமாயினர், தாய் மொழிக்காக!

பள்ளிகள் தோறும், காலை, மாலை நின்று, இந்தியிலா தீர்கள் என்று என்னாற்றோர் அறப்போர் புரி-னர்.

தமிழ் அறிஞர், பாவலர், நாவ- எல்லோருமே எதிர்த்தனர்.

எங்கெங்கும் மாநாடுகள் கூட்- இந்தி ஆகாதென எடுத்துக் க- டினர்.

தமிழால் நாவசைப்போர், பே- ஓட்டுவோர் எல்லோரும், இ- எதிர்ப்பியக்கத்தில் முழு மூச்- ஈடுபட்டனர்.

தமிழகமே எதிர்த்தது — இ- கூடாதென்று!

நாடே, எதிர்ப்பியக்கம் நடத்- யிருக்கிறது!

ஆனால், நாடாள வந்துள்- மாதவ மேனனார் சொல்கிறார் அ- கள் சிலர் என்று!

அவர் வாக்குப்படியே, வா- திற்காக, இந்தி எதிர்ப்பியக்கம் நட- தியோர் சிலர் என்றே வைத்- கொள்வோம்.

அந்தச் சிலரின் சீற்றத்திற்க- ஏன் இவர் அலைமோத வே- டும்? சிலர் அவர்கள், என்று தள்- விட வேண்டியதுதானே! சிலரி- சீற்றத்திற்கு சிரம் வணங்கு- னேன்?

சிலர் செய்த அறப்போர்த- இந்தப் பலரை ஆட்டிவைத்த- சிலரின் போர், இந்தப் பல- முகத்திலே முக்காடு போட வை- தது! ஆச்சாரியாரை ஆழந்தெரி- மல் காலைவிட்டு விட்டேனே, என்- அங்கலாய்க்க வைத்தது! அவி- யாருக்கு, முகவரி மாற்றம் போ- கூட முடியாத நிலை பிறக்கச் செ- தது! மாதவ மேனனாரை மண்- யிட்டு மன்னிப்பு கேட்கச்செய்த-

இந்தியை சிலர்தானே எதி- தார்கள்! ஏன் இந்தப் பலர் இ- யைத் திணிக்க முடியவில்லை? தி- டாடினர், — திருதிருவென விழி- தனர், திருடர்போல!

இந்தி கட்டாயபாடமென்று தி- டமிட்ட அவர்கள், திடீர்கர்ண- போட்டது ஏனோ! இந்தி- எதிர்த்தவர் சிலராக இருந்தும்- இந்தப் பலரின் துணையிலே பவ- வரும் மந்திரிசபை, கட்டாய பா- மில்லை யென்று ஏன் மாற்றிற்று?

சிலரின் போர், பலரின போக்- மாற்றி விட்டதே! ஏன்?

பலர், அப்படியானல் மண் பது ...ளா? சிலரை அடக்க முடியாத ...சுப் பொம்மைகளா? அலங்காச் ...கைளா?

மந்திரியார் வாக்கு, இல்லா ...ட்டால் பொய்யாத இருக்க ...ண்டும்!

நம்மைச் சிலர் ஏன்று அவர் ...றுகிருர். ஆனாலும், பலரின் ...க்கபலம் உள்ள அவரே புலம்பு ...ருர். இந்தி கட்டாய பாடமில்லே, ...ன்றாலும் என்ன, எத்தனையோ ...ள்ளிக்கூடங்களில் இருக்கின்றதே ...ன்று கூறித் திருப்தி தேடுகிருர்.

இந்தி எதிர்ப்பியக்கம், சிலருடை...து என்பதோடு மட்டுமல்ல, ...தனை அடக்கிவிட்டோம் என்று ...ட அஞ்சாது புளுகுகிருர்!

இந்தி எதிர்ப்பியக்கத்தாரை ...டக்கிவிட்டோம் என்றால், இந்தி ...ட்டாயபாடம் என்றாக்கியிருக்க ...வண்டும்—இல்லேயே! பின் மாதவ ...மேனனர், இப்படி மனம்போன ...பாக்கில் ஏன் பேசுகிருர்!

மந்திரி என்றால் வாயில் வந்ததை ...யெல்லாம் பேசிடுவதென்றால் ...ிந்தை இது!

ஆகவே, மந்திரியார் கூறு...வது உண்மையில்லே.

நாம் பலர்! அவர்கள் சிலர்! ஆகவே ...தான் வெற்றி நமக்கு கிடைத்...துள்ளது!

இதனை மாதவ மேனனர் மட்டு...மல்ல, செத்த மொழிக்கும், அதை ...யொட்டி, இந்த வந்தமொழிக்கும் ...வக்கீலாகும் பேர்வழிகள் அனைவ...ருமே அறிந்து கொள்ளவேண்டும்.

சிலர் அவர்கள், ஆகவேதான் ...திண்டாடுகிருர்கள்!

அவரே, கூறுகிருர், இந்திக்கு ...எதிர்ப்பிருப்பதைப்பற்றி வடநாட்...டிலே கேட்கிருர்கள் என்று!

அவரது வடநாட்டுச் சுற்றுப்பிர...யாணத்தின்போதும், ஹைதராபாத் ...சென்றிருந்தபொழுதும், பலர், ...கேட்டனராம்! பலராஜ்ய மந்திரி...களும் விசாரித்தனராம்! இந்தி ...எதிர்ப்பு இயக்கத்தைப்பற்றி அங் ...கெல்லாம் கேட்கிருர்கள்!

ஆனலும் சொல்லுகிருர் சிலரின் ...வேலே இது என்று! மந்திரியாருக்கு ...மண்டைக் குழப்பம் ஏதுமில்லா ...திருக்கும்பொழுதே!

அதுமட்டுமா? அந்தச் சிலரை அடக்கிவிட்டோம் என்று கேட்ட அவர்களுக்குப்பதில் சொன்னாராம்!

ஆனல், இவரை நம்பவில்லே வடவர் இவரின் வார்த்தைகளை உண்மையென்று நம்பவே இல்லே!

எப்படி நம்புவர்? நாட்டு நிலவரத்தையே புரிந்துகொள்ளாத அவர்களை நம்பவில்லேயென்றால், இவரின் நெஞ்சறிந்த பொய்யை, தமிழகம் எப்படி நம்பும்?

சிலர் செய்த போர், வடநாடு வரைசென்று, அங்குள்ளோர், மந்திரியாரை விசாரிக்கிருர்கள் என்றால் இதற்குக் காரணம், நாம் சிலரில்லே, பலர் என்பதையுணர்த்தும்!

இந்த உண்மையை மறைக்க ஒரு புதுப்படுதா கண்டுபிடித்துள்ளார் மாதவமேனனர்.

விளம்பரத்தால்தான் இந்த இயக்கம் இப்படி வளர்ந்துவிட்டதாம்!

மந்திரி, கொலம்பஸாகிவிட்டார்! கண்டுபிடித்துவிட்டார் பாருங்கள், இந்த உண்மையை!

இந்தி எதிர்ப்பியக்கத்திற்கு அதிக விளம்பரமாம்! என்ன புதுக் கண்டுபிடிப்பு! இந்து, சிக்கு பாடிற்று? இந்தியன் எக்ஸ்பிரஸ் இயக்க முரசாயிற்று? தினமணி, தினந்தினம் நம்மைத் திட்டித் தீர்த்ததே! தினசரி, பாரத தேவி, சுதேசமித்திரன் — எதுதான் விளம்பரம் தந்தது!

இருட்டடைப்புக்கே, இலக்கணம்வகுத்துக் காட்டினரே, அந்த இயக்கத்தின் பொழுது!

மந்திரியார் கூறுகிருர், விளம்பரத்தால் தான், வடநாடு அறிகிற அளவு வளர்ந்துபோனது இந்த விபரீதம் என்கிருர்!

அதுவா உண்மை? இல்லே. மக்கள் அனைவரும் திரண்டு ஒருமுகமாக எதிர்த்ததால்தான் வடநாடு திடுக்கிட்டது! மந்திரியாரைக் கேட்ட வண்ணமிருக்கிறது!

நாம் பலராக இருப்பதால்தான் அந்த நிலே! இதை மறைக்க விளம்பரத்தால் வந்தது என்கிருர்!

பிரச்சார பீரங்கிகள் அனைத்தும் நம்மீது தூற்றல் குண்டுகளை வீசிய படியே இருந்தனவே தவிர, இந்த இயக்கத்தை ஆதரித்ததில்லே! நம், இயக்க ஏடுகள், சிலவே, இவ்வியக்கத்தினை நடத்திற்று! வடநாட்டார் பார்த்தாலே 'பாவ' மென்னும் ஏடுகளை ஆதரித்தனர்!

வடநாட்டார் அஞ்சுவதற்குக் காரணம், விளம்பரம் விளைத்த விபரீதமல்ல! அதற்குக் காரணம் உண்டு!

* * *

வெளிநாட்டு உதவி மந்திரி கேஸ்கார் திருச்சியில் பேசுகையில், மாதவ மேனனர் பாணியிலேயே குறிப்பிட்டுள்ளார்—இந்தி எதிர்ப்பு அரசியல் குறிக்கோளோடு செய்யப்பட்டதென்று!

இருந்தாலும், அந்த எதிர்ப்பியக்சத்திற்குப் பயந்துகொண்டுதான் பேசவேண்டியிருக்கிறது!

இந்திய சர்க்கார் தமிழகத்தின் மீது இந்தியை திணிக்க முயலாது!

இப்படிக் கூறிவிட்டுத்தான், மலேயாளத்தாரின் சிலரைப் பற்றிப் பேச முடிகிறது!

அவர் குறிப்பிட்டது போல, வடநாட்டு மந்திரி, அதுவும் மத்திய சர்க்கார் மந்திரி, அதிலேயும் வெளிநாட்டிலாகா மந்திரி, உள்நாட்டைப் பற்றி இப்படிப் பேசவேண்டியிருக்கிறது!

இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று கூறிவிட்டுத் தான் பேச முடிகிறது!

இதற்குக் காரணம் விளம்பரம் என்கிருர் மந்திரியார் — அதுவா உண்மை!

விளம்பரமல்ல, இதற்குக் காரணம், நாம் தரும் விளக்கம்!

விளக்குகிறோம், நம் திட்டத்தை! அதனை விருப்பமில்லாவிட்டாலும் கேட்க வேண்டிய நிலேயை உண்டாக்கியிருக்கிறோம்!

ஆகவேதான் மந்திரியார் வடநாடு சென்றால், மக்கள் மட்டுமல்ல, மந்திரிகளில் சிலரும் கேட்கிருர்கள்! இவர்கள் மறுத்துரைத்தால், நம்புவதில்லே!!

* * *

விளம்பரம்

விளக்கம்.

மந்திரியாருக்கு, அவரை முடிசூட்டி வைத்திருக்கும் கட்சியும், அதற்கு பின்னணிபாடும் பத்திரிகைகளும் விளம்பரம் தாலாம்!

நாம், அவர்களுக்கு விளக்கந்தருகிறோம்!

அதன் விளைவை வேறெங்கும் போய்ப்பார்க்க வேண்டியதில்லை.

மாதவமேனன், சென்னையில், எந்த இந்தி பிரச்சார மேளாவில் நம்மைச்சிலர் என்று கேலிபேசினாரோ, அங்கேயே இந்த விளக்கத்திற்கு அறுவடை காணலாம்.

அவரை அடுத்துப் பேசிய, ஹரிகிருஷ்ண சர்மா, மிகவும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

தென்னிந்திய மக்கள், துளசிதாசர் மீரா போன்றோரின் இந்திப் பாடல்களைப் பாடுவதுபோல், வடநாட்டாரும், சுப்ரமணிய பாரதி போன்றோரின் பாடல்களைப்பாட வேண்டும்

இந்தி இங்கு! தமிழ் அங்கு உண்டா? கேட்கிறார்கள் மக்கள். அதை சர்மா, இனத்தின் போக்குப்படி, உபதேசமாக்கி விட்டார்!

இங்கே, இந்திப் படிக்கச் சொல்கிறார்கள்! அவர்கள் நம்மொழியைப் படிக்கிறார்களா? கேட்கத் தானே தோன்றும்! அதனையறிந்து தான் சர்மா, சாதாரண போதனை மொழியாகத் தந்துள்ளார்.

இந்தக் கேள்விதான் வளர்ந்து, வளர்ந்து நம் இலட்சிய பாதையில் வந்து முடிகிறது!

இங்கே இந்தி, அங்கே தமிழில்லை!

இங்கே துளசிதாசர், மீரா; அங்கே இராமலிங்கர், காரைக் காலம்மையார் இல்லையே!

இங்கு, இந்திராமாயணம், அங்கே திருவாசகம், தேவாரம் இல்லை!

இங்கே சாயிபாபா! சென்னையைத் தாண்டிவிட்டாலே, தாயுமானவரைத் தெரியவில்லை! பட்டினத்தடிகளைப் புரிபவில்லை!

இங்குள்ளோருக்கு அங்குள்ள கங்கை புண்ணிய நதி! அங்குள்ள காசிதான் புண்ணியபூமி!

காசி, சமூக புண்ணிய பூமி, டெல்லி, அரசியல் புண்ணியபூமி!

அங்கிருந்து இங்கு வருவோருக்கு அமோக வரவேற்பு!—வருபவர் யாரானாலும். இங்கிருந்து அங்கு செல்லும் எவருக்கும், இரயிலடியில் போர்ட்டர் கூட வரவேற்பதில்லை!

அங்குள்ள தலைவர்களின் பெயரால் இங்குபார்க், மைதானம், கட்டிடங்கள், காட்சி சாலைகள்! இங்குள்ள தலைவர்களுக்கு, ஒரு சிறு நினைவும் இல்லை அங்கு!

இங்கு அரிசியில்லையென்றால் அங்குள்ள கோதுமையை அதிக விலையில், அவசியமில்லாமல் அனுப்புவானேன்?

நாலின்றி நாம் தவிக்க, இங்குள்ள நாலை அனுப்புவானேன்?

மக்கள் தரும் வரிகளையெல்லாம் அங்கு அனுப்பிவிட்டு, திட்டங்கள் எது திட்டினாலும், பணமில்லை பணமில்லை யென்று பல்லவி பாடுகிறார்களே! ஏன்?

தென்னாடு, வடநாட்டுடன் ஏன் ஒட்டியிருக்கவேண்டும்?

ஆகவே, திராவிட நாடு, திராவிடருக்காக வேண்டும்!

இப்படி நம் இலட்சிய பாதைக்கு வந்து சேர்கின்றனர்.

இது விளம்பரத்தால் வரவில்லை. விளக்கத்தால்!

இதனை வடநாட்டார் அவ்வளவு அக்கரையுடன் கவனிக்கின்றனர். ஆகவேதான், மலையாளத்தார் போகும்பொழுது, இந்தியார் விசாரிக்கிறார்.

மலையாளத்தார், ஆறுதல் கூறுகிறார். இந்தியார் நம்பமுடியாது என்று மறுக்கிறார்!

* * *

நாம், விளக்கந் தருகிறோம், வடநாட்டவருக்கு!

இந்துவினாலல்ல, மித்திரன்மூலமல்ல, பாரததேவியை தூதனுப்பியல்ல, ஆனந்தவிகடன் அரசியல் நிருபர் துணைகொண்டல்ல, கல்கியின் வாய் வழியிலல்ல, தினமணி, தினசரியார்களின் பக்கபலங்கொண்டல்ல!

கையிலே கருப்புக்கொடி! காட்டுகிறோம்!

வடநாட்டு மந்திரிமார்கள் வரும் பொழுதெல்லாம் காட்டுகிறோம்!

அது, அவர்களுக்குக் கருப்புக் கொடியாகத் தெரியவில்லை, கருத்துக்கொடியாகிவிடுகிறது!

இப்பொழுதாவது மனது தெளிவடைவாராக மாதவ மேனனர்!

சென்றவாரம், ஜகஜீவன்ராம் வந்திருந்தார்.

கோவை

சேலம்

மதுரை

சென்னை

ஆகிய இடங்களில் கருப்புக் கொடி காட்டினர்.

தி. மு. கழகத் தோழர்கள் மத்திய கழகத் தீர்மானத்தின்படி சட்டவரம்பிற்குட்பட்ட முறையில் கருப்புக்கொடிமூலம், திராவிடநாட்டோர், வடநாடு ஆதிக்கத்தை வெறுக்கின்றனர் என்பதைத் தெளிவாகக் காட்டிவிட்டனர்.

கருப்புக்கொடி காட்டாமல் தடுக்க என்னென்ன முறைகள் கையாண்டனர்!

தடியடி தந்தனர், விரட்டியடித்தனர், இரத்த மழை பொழிய வைத்தனர், சிறைக்கு அனுப்பினர், வழக்கில் அபராதம் வாங்கினர்!

ஆனாலும் கருப்புக் கொடி காட்டினோம்! கருத்து தெளிவடைந்தனர்!!

விளக்கம் கிடைக்கவேதான், அவர்கள் விழிப்படைந்து, விசாரிக்கத் தொடங்கியுள்ளனர். இதனை, கண்டு விசாரங்கொண்டு பயன் என்ன?

மாதவ மேனனர் குளறியது போல. விளம்பரமல்ல, விளக்கம் பெறுகிறார்கள்! ஆகவே விசாரிக்கிறார்கள்.

இந்தியைத் திணிக்க முடியாத இவர் நம்மைச் சிலர் என்கிறார். அதனால் சமாதானம் தேடுகிறார்.

இந்தமாதிரி நாட்டின் நிலையுணராமல், மமதையோடு ஆட்சி புரிந்தோர் பேச்சுகள் எல்லாம், மாங்கன் மொழிபோல 'ரிகார்டு' கூட செய்யப்பட்டதில்லை!

அவர் வாய்மூடுமுன் ஆட்சிப் பீடம், அழிந்துபடும்!

இவரோ, நம்மைச் சிலர் என்று சொல்லிவிட்டு, உளறுகிறார், மன்னிக்கவேண்டும், குளறுகிறார்!

நாம் பலர், அவர்கள் சிலர், ஆகவேதான், வடநாட்டாதிக்கமே, வளைந்து குனிந்து நம்மைப்பற்றி விசாரிக்கும் நிலை பிறந்திருக்கிறது!

இந்நிலை வளரும்—அப்பொழுது நாம் மிகப்பலராவோம், அவர்கள் மிகச்சிலராவர், பிறகோ, எவருமிலர் என்ற நிலைபிறக்கும்!

துளிர்கள்

★

பாகிஸ்தான் எல்லையில் இந்தியத் துருப்புக்கள் குவிந்துள்ளன.

காஷ்மீரில் சுய நிர்ணயத்திற்கு விரோதமாக இந்தியப் படைகள் நடை செய்கின்றன.

ஜுனாகாத், ஹைதராபாத், நேபாளம் இங்கெல்லாம் இந்தியப் படை என்ன செய்தது என்பதை உலகறியும்.

இந்திய ராணுவ பட்ஜெட்டில் ஒரே ஆண்டில் 40 கோடி ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்திய பத்திரிகைகள் எங்கள் மீது விரோத விஷத்தைக் கக்கியபடியே உள்ளன.

நீங்கள் சமாதான மத்தியஸ்தத்திற்கு எதிராக, சமயங் கிடைத்தால் பலாத்காரத்தைப் பயன் படுத்தவே முனைகிறீர்கள்.

* * *

இந்தியாவின் மீது படையெடுக்க வேண்டும் என்றே யுத்த பிரசாரமும், யுத்த பீதியும் கிளப்பியபடியே இருக்கிறது பாகிஸ்தான்.

எல்லைப் புறத்தில் பாகிஸ்தான் படைகள், மடைதிறந்தது போல, வந்தவண்ணமே யுள்ளன.

யுத்தவெறிப் பிரசாரம் ஓய்ந்தபாடில்லை.

பிரிவினையிலிருந்தே கனரக ஆயுதந் தாங்கிய கவசப் படைகளை பலப்படுத்தியே வந்திருக்கிறது.

ஜெனரல் ஆக்கின்லெக், கிரேஸி என்ற வெள்ளையர்கள் போர் முஸ்தீபை கவனித்து வருகின்றனர்.

மத யுத்தம் செய்யுங்கள் என்று மனந்துணிந்து பேசுகிறார்கள்.

தொழுகை யிடங்களை பாசறைகளாகப் பயன் படுத்தவும் யோசிக்கிறார்கள்.

பாகிஸ்தான் ஒற்றர்கள் சுற்றுகிறார்கள்.

இந்துக்களின் துப்பாக்கி லைசென்ஸுகளை ரத்து செய்து நிராயுதபாணிகளாக்கி வைத்துள்ளார்கள்.

* * *

அவர்கள் இவர்கள் மீது குற்றஞ் சாட்டுகிறார்கள்! இவர்கள், அவர்கள் மீது பழி சுமத்துகிறார்கள்!

லியாகத், நேருவைக் குறை கூறுகிறார்! நேரு லியாகத்தை குற்றவாளி யென்கிறார்!

யுத்தத்தைக் கிளப்புகிறது இந்தியா என்கிறது பாகிஸ்தான்! போர் வெறிகொண்டு திரிகின்றது என்று பாகிஸ்தானைச் சுட்டிக்காட்டுகிறது இந்தியா!

குற்றவாளி யார் என்பதல்ல, இப்பொழுது நம் பிரச்சினை!

செய்ய நினைக்கும் குற்றத்தைப் பற்றியது நம் கவலை!

போரிடப் போகிறார்கள் — அதற்கு ஆரம்ப விழா செய்யப் போகிறவர் யார் என்பது குறித்து அவர்கள் தந்தியிலே பேசுகிறார்கள்!

ஆனால், அந்தப்போர் நிகழ்ந்து விட்டால் நாட்டின் நிலையை எண்ணிக் கலங்குகிறோம் நாம்.

போரின் கொடுமையை நாம், எடுத்துக் காட்டியே, நாட்டோர் தெரிந்துகொள்ளவேண்டிய நிலையி யில்லை.

போர்ப் புயலில் சிக்கி, உலகம் சீரழிந்து, இப்பொழுது தான் ஓரளவு ஓய்வாக இருக்கிறது!

மகாயுத்தம் வந்து, உலகத்தையே நிலை கலங்கச் செய்தது.

யுத்தமே இனி நடைபெறவிடக் கூடாது என்று தான், ஐ. நா. சபை ஏற்படுத்தியதாகவும் நாம் அறிவிக்கப்பட்டோம்.

அப்படியும், கொரியாவின் சோக கரிப்பு, நம் சிந்தையைக் குடையச் செய்தது. இப்பொழுதோ, அங்கேயும் சமாதான சங்கநாதம் கேட்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் என எண்ணிடுகிறோம்.

ஆனால், போராம், இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும்!

என்ன வேதனை! எத்துணை விபரீதம்! பாருங்கள்.

அஹிம்சையே எங்கள் பாதை என்று அகில உலகும் அறியச் செய்த காங்கிரசாட்சிதான் இங்கு நடப்பது.

இருந்தும் காஷ்மீர் களத்தை நமக்கு காட்டினர்.

அதுபோலவே, பாகிஸ்தான் கேட்டவர், சலாசாம் தாக்க காடு கேட்டனரே ஒழிய, மோதுதல் கேட்கவில்லை!

ஆகவே, நாடு எதிர்பார்ப்பது, இவர் குற்றவாளியா, அவர் குற்றவாளியா என்ற விசாரணை மண்டபமல்ல, போரில்லாத அமைதிபூமியை! எனவேதான் நாம் இந்தப் போர்க் குறிகளைக்கண்டு நிலைகலங்குகிறோம்

போரின் கொடுமையை உணர்ந்தோர் அனைவருமே, அப்படித்தான் இந்த வேதனை விளையாட்டைக் கண்டு மனம் புண்படுகின்றனர்.

இருநாட்டுப் பிரதமர்கள் தங்கள் பிரதாபங்களைப் பெரிதென மதிக்காமல், இந்நாட்டு பிரலாபங்களை அக்கறையுடன் கவனித்தால், இப்படி மோதிக்கொள்ளமாட்டார்கள்-

அவர்கள், தங்களை மறந்து, தாங்கள் இருக்குமிடத்தை ஒரு கணம் சுற்றிப்பார்க்கவேண்டும்.

பிரதமர் இடம் சாதாரணமானதல்ல! இருநாட்டின் சுகதுக்கங்களையே சுமந்து நிற்கிறார்கள் அவர்கள்! அவர்கள் அந்த பெரும் பொறுப்புகளை துச்சமெனஎண்ணி, இச்சைபோன போக்கில், நடந்துகொண்டால், நாடு காடாகும். அதனை அவர்கள் உணரவேண்டும்.

பாகிஸ்தான் போர் ஏற்பாடுகள் செய்கிறதா, இந்தியா, எல்லைப் புறத்தில் படைகளைக் குவிக்கிறதா என்று நாடு பார்க்கிறது!

7-ம் பக்கம் பார்க்க

மாளிகையில்!

★

சென்னைக்கு 20—7—51-ல் வந்த வடநாட்டு மந்திரி ஜகஜீவன் ராமுக்கு 'திராவிடன்' துணையாசிரியர் தோழர் கலைமணி கருப்புக் கொடி காட்டியபொழுது கைது செய்யப்பட்டு, பிறகு விசாரணை நடந்து ஒரு வார சிறை தண்டனை யளிக்கப்பட்டார். தோழரின் இலட்சிய ஆவேசம், நம் இதயத்தைக் குளிர்விக்கிறது—சிறையென்பது, எதேச்சாதிகாரிகள் ஆட்சியில் நல்லவர்களின் மாளிகை என்று கூறுகிறோம், தோழருக்கு!

திராவிடநாடு

ஞாயிறு] 29—7—51 [காஞ்சி

வாழ்வின் இலட்சியம்!

★

என் வாழ்க்கையின் இலட்சியமாக இதைக் கொள்கிறேன்.

அவர் சொல்கிறார், காது குளிர்கிறது—நெஞ்சு மகிழ்கிறது!

அவர் மந்திரி, அவர் வாழ்க்கையின் இலட்சியமாக எடுத்துக் கொள்கிறேன் என்னும் பொழுது நமக்கு களிப்பு பொங்குகிறது.

சர்வதேச தொழிலாளர் சங்க மாநாட்டில் கலந்துகொள்ள ஜெனிவா சென்றிருந்த பொழுது கூட, இதற்காக நிபுணர்களைச் சந்திக்க மேற்கு ஜெர்மனிக்குச் சென்று திரும்பினார்.

ஆம், சென்னை சர்க்காரின் ரெவின்யூ மந்திரி கனம் சீதாராம ரெட்டி அவர்களுக்கு அவ்வளவு அக்கரை! வரவேற்க வேண்டியது—பாராட்ட வேண்டிய ஒன்று!

தென்னாற்காடு மாவட்டத்தில் பழுப்பு நிற நிலக்கரி கிடைத்ததும், அதற்கான சுரங்க ஏற்பாடுகளை சர்க்கார் மேற்கொண்டதும் நாமறிந்ததே!

இந்தச் சுரங்கத்தின் சிறப்பை எடுத்து விளக்கியுள்ளார் கனம்.

இந்த பழுப்பு நிற நிலக்கரிச் சுரங்கம், தென்னிந்தியாவில் மட்டுமல்ல, இந்தியா முழுதுமே சிறந்து விளங்கும். இச்சுரங்கம், சென்னையின் செல்வத்தை மட்டுமல்ல, இந்தியாவின் செல்வ நிலைமையையே அதிகரிக்கும்.

மந்திரியார் குறிப்பிடும் நிலக்கரி அவ்வளவு மகத்துவம் வாய்ந்தது!

இந்தச் சுரங்கம் அமைப்பதை, தன் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். மிக்க மகிழ்ச்சி — தாராளமாக செய்து முடிக்கட்டும்.

சுரங்க வேலைக்கு, அமெரிக்க நிபுணரை நியமிப்பதா. ஜெர்மன் வல்லுநரை வரவழைப்பதா என்ற ஆராய்ச்சியிலே இறங்கிவிடாமல், முடிவை விரைவாக்கி, நிபுணர்கள் வந்து சேர வழி செய்யவேண்டும்.

தென்னாற்காட்டில் நிலக்கரிச் சுரங்கம்— இதனால் தென்னாட்டிற்கு செல்வமும் கிடைக்கும், சிறப்பும் வந்தெய்தும்!

திராவிடத்தில், சுரங்கமென்றால், தென்னாட்டோடு முடிவதில்லை, வடநாட்டிற்கும் வாழ்வளிக்கும் என்கிறார்.

உண்மை திராவிடத்தில் வளம் பெருகினால் தான் வடநாடும் செழுமைகொழிக்க வாழ முடியும்!

நாம் வாடினால், அவர்கள் வறுமை கீதம் பாடத்தான் வேண்டும்!

ஏன்? தென்னாடு செழித்த பூமி. இதிலிருந்து, அங்கு போகும் பொருள்கள் ஏராளம். இவை போய்ச் சேராவிட்டால் அவர்கள் வாழ்வில் மலர்ச்சி காணமுடியாது.

திராவிடத்தில் நிலக்கரிச் சுரங்கம் அமைப்பதை வாழ்க்கையின் இலட்சியம், பிறப்பின் குறிக்கோளாகக் கொள்கிறேன் என்கிறார், கனம் சீதாராமர்!

அதனால் வடநாட்டினருக்கும் இலாபந்தான் என்றும் குறிப்பிடுகிறார், அவரே.

ஆம், நிலக்கரி தென்னாற்காட்டில் கிடைக்கிறது. சேலத்தில் இரும்பு கிடைக்கிறது. காவிரியின் துணையும் கிடைக்கும், மேட்டூர் அருகிலிருப்பதால்! போக்குவரத்து வசதியும் உண்டு.

தொழிலகங்கள் தோன்ற, இவை, மிகமிக அடிப்படையான தேவைகள். அவை அத்தனையும் தேவைக்கும், வசதிக்கும் ஏற்ப அமைந்து கிடக்கின்றன.

திராவிடத்தில் தொழில் வளம் நிறைந்துவிட்டால், செல்வம் ஏராளம் பெருகும்.

கனம், காண்கிற கனவுமட்டும், நினைவாகி விட்டால், திராவிடத்தில் புதிய நிலை பூத்துக்குலுங்கும்.

கனம், நிலக்கரிச் சுரங்கம் அமைப்பதை தன் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார். அவரது பன உறுதி காண மகிழ்கிறோம்! இலட்சிய கீதம் கேட்டு பூரிக்கிறோம்! பாராட்டுகிறோம்! ஆனால், திராவிடத்தில் நிலக்கரிச் சுரங்கம் அமைப்பதோடு வேலை முடிந்திடவில்லையே!

பழுப்பு நிற நிலக்கரி மட்டுமல்ல இங்கு கிடைப்பது — இன்னும் பலப்பல!

திராவிடம் வளங்கொழிக்கும் பொன்னாடு. அதனைத் தாயகமாகக் கொண்டுள்ள பெருமை நமக்குண்டு.

இங்கு வற்றாத ஆறுகள், பார்க்கவே, பிரமிக்கச் செய்யும் பொதுமரைத் தடாகங்கள், இன்பத்தைத் தேக்கும் ஏரிகள், களிப்பைக் காட்டும் குளங்கள் பலப்பல உண்டு. நீர் வளம் நிறைந்த நாடு, நம் திராவிட நாடு.

வளமான வயல்கள், வாழ்விலே செழிப்பைச் சேர்க்கும் விளைவு உண்டு.

நெல் தருகிறோம், பிறருக்கு — நிமிர்ந்து நடக்கிறோம் அதனால்.

மண்ணைத் தோண்டினால் தங்கம் —மனிதன் காலுக்கடியிலே பொன் இங்கு தவிர உலகில் வேறெங்குமே கிடைக்காது.

கடலுக்கடியில் முத்து கண்டதுண்டா, வேறெங்கேனும்! இங்கு உண்டு.

அப்ரகம், இங்கு நமக்கு கிடைக்கிறது.

மாங்கனீஸ் தருகிறோம், உலகிற்கு, உவந்து!

காட்டுக்குள் நுழைந்து விட்டால் சந்தனமணம், தேக்கின் வனப்பு, சால்மரத்தின் உறுதி, கருங்காலியின் கவர்ச்சி, நம்மைக் குதூகலத்தில் ஆழ்த்தும்.

காட்டிலே கிடைக்கும் மரப்பசையும், பலவேலைகளுக்கு உதவும்.

நீலகிரி தேயிலை, காபி, கொடைக்கானல் கனிகள் தினந்தினம், நாம் காண்கிறோம்.

சேலம், இரும்பு, நமக்கு புதிய சுரங்கப்பாதைக்கும் வழியமைக்கும்.

ஆம், கிடைக்கும் பொருள்களின் பட்டியலுக்கு இதுமாதிரி—இதுவே முடிந்ததல்ல!

இத்தனைப் பொருள்களையும் தருகிற திராவிடநாடு, இன்னமும் வடவர் பிடியில் இருக்கிறது!

சீதாராமர், தென்னாட்டில் நிலக்கரிச்சுரங்கம் அமைப்பதையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்கிறேன் என்கிறார் ஏனெனில், அவர் மந்திரி!

இல்லாவிட்டால், நிலக்கரிச் சுரங்கத்தோடு நிறுத்தமாட்டார்மேலும் சென்றிருப்பார்!

தென்னாற்காட்டில், பழுப்புநிற நிலக்கரி கிடைக்குமென்று, கொஞ்ச நாள்களுக்கு முன்னால்வரை யாருக்கும் தெரியாது.

இப்பொழுது, கண்டுபிடித்துவிட்டார்கள்! ஆகவே கவனம்செலுத்துகிறார்கள்!!

சுரங்கம் அமைப்பதையே வாழ்வின் இலட்சியமாகக் கொள்கிறார் அமைச்சர்.

திராவிடத்தின் வளமும், வல்லமையும், வரலாறும், தோண்டியெடுக்கப்படாதநிலக்கரிகூட அல்ல-சுரங்கம்! அதன் பளபளப்பு இவர்கள் பார்வையில் படவில்லை!

அந்த ஒளி இவர்களுக்கும் தெரியச்செய்யவேண்டும் என்ற பணியிலேயேதான் நாம் ஈடுபட்டுள்ளோம். அதுவே நம்வாழ்வின் இலட்சியமாகக் கொண்டுள்ளோம்.

நிலக்கரி கிடைத்தவுடன்சுரங்கம் அமைக்க சுறு சுறுப்பாய் வேலை செய்கிறார்கள்! நிபுணர்களை நாடி அலைகிறார்கள்!

சீதையை இழந்த ராமன் தேடிக் கண்டதுபோல, இழந்த திராவிடத்தை இன்னும் காணவில்லை, மனம் சீதாராமர்!

திராவிடத்தின் சிறப்பும்தெரிந்துவிட்டால், நாம் நினைப்பதை புரிந்திடுவர் என்பது நமக்குத் தெரியும்.

அத்தகைய வளங்கள் பலவும் நிறைந்த திராவிடம்தான் வடவரின் பிடியிலே சிக்கி சீரழிகிறது என்பதை யெண்ணும்பொழுது வருத்தம் நம்மை வாட்டுகிறது! துக்கம் நம்மை துரத்தியடிக்கிறது!

திராவிடத்தை வடநாட்டிலிருந்து பிரித்திடுவதே, நம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றி வருகிறோம்.

கனம், சீதாராமர், நிலக்கரி சுரங்கம் அமைப்பதே தன் வாழ்க்கையின் இலட்சியமாகக் கருதுகிறார், நிலக்கரிமட்டும் கண்களுக்குப் புலப்படுவதால்!

திராவிடச் சுரங்கமே, தோண்டப்பட்டு, பலவளங்களேனும் தங்கம் தோண்டியெடுக்கப்பட்டால், திருத்தப்படாத நிலக்கரிச் சுரங்கத்தை அமைப்பதே வாழ்வின் இலட்சியமாகக்கொள்ளமாட்டார் — இத்திராவிட நல்திருநாட்டைப் பிரித்திடுவதே தம்வாழ்வின் இலட்சியமாகக் கொள்வார்!

பொது விசாரணை தேவை

'தேனி' கலவரத்தைக்கண்டித்து சர். பி. டி. ராஜன், வெளியிட்டுள்ள அறிக்கையின் சுருக்கம்:—

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த தேனியில் 4—7—51ல் திராவிட முன்னேற்றக் கழக கூட்டம் நடந்து கொண்டிருந்தபொழுது, ஏற்பட்ட சம்பவங்களைப் பார்த்தால், காங்கிரஸ்காரர்கள் தலையிட்டுக்கலைத்தது நன்றாகத் தெரியும். சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கையில், அதிகாரிகள் கடமைமீறி நடந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தேனி சம்பவத்தினை விசாரித்து அறிக்கை சமர்க்கும்படி உத்திரவிட்டு, டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலை அனுப்புவதற்குமுன்னால் சர்க்காருக்கு அந்த இடத்தின் அதிகாரிகளிடமிருந்து, ஜில்லா கலெக்டரிடமிருந்தோ, ஜில்லா சூப்பரண்டிடமிருந்தோ, அறிக்கை வந்ததா என்பது நமக்குத் தெரியவில்லை.

டெபுடி ஜெனரல் அறிக்கையை வைத்துக் கொண்டு, நான்கு அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்துள்ளார்கள். மேலும், இலாகா விசாரணை நடத்தச் சொல்லியிருக்கிறார்கள். மேலும், கலகம் செய்தவர்களெனப் பிடிக்கப்பட்டவர்கள் மீது வழக்குப் பதிவு செய்வதா இல்லையா என்பதையும் அவரையே முடிவு செய்யச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தச் செய்கை, சர்க்கார் தன் கட்சித் தோழர்களைக் காப்பாற்ற நீதியின் போக்கிலே கூட தலையிட்டு மாற்றுகிறது என்ற எண்ணத்தைத் தான், பொது மக்களிடத்தே உண்டாக்கும்.

ஆகவே, பொதுமக்களின் பயத்தைப் போக்கவேண்டுமானால், உயர் நீதி மன்ற நீதிபதி நிலையிலுள்ள ஒருவரைக் கொண்டு, தேனியில் நடந்த சம்பவங்களைப் பற்றி ஒரு பொது விசாரணை நடத்தவேண்டும் என்றே நான் கருதுகிறேன்.

—பி. டி. ராஜன்

5-ம் பக்கத் தொடர்ச்சி

குத்துச்சண்டை பார்க்கவில்லை—கும்பி நிறைய வழியுண்டா என்றே பார்க்கிறது, நாடு!

வீரப் பிரதாபம் இப்போது தேவையில்லை. நாட்டினர் வாழ்வில வறுமை, பட்டினி பஞ்சம் என்ற வேதனை விரட்டப்பட்டதா என்றே கேட்கிறது, நாடு!

ஆம், இந்தியா, பாகிஸ்தான், இரு நாடுகளுமே, இதனை உணரவேண்டும்.

* * *

இந்தியா, பாகிஸ்தான் இரண்டுமே, இளந் துளிர்கள்!

துளிர்கள், சூறவளியில் சிக்குவானேன்?

வெள்ளையர் வெளியேறிடவே, இவ்வளவு நாட்கள் தள்ளவேண்டியிருந்தது!

பிளாசி முடிந்தது—பிறகு என்ன செய்யவேண்டும்?

சரித்திரத்தைப் புரட்டிக் கொண்டு, பாபர் காலத்திற்குப் போய், பழய கதையை நடத்துவது தானா?

பானிபட் மீண்டும் ஏன்? பானிபட் நடந்தால் நாம், பிளாசியிலேயே பட்டொழிந்திருக்கலாமே! வெள்ளையர்களை விரட்டி விட்டு மீண்டும் முகப்மதியர்களை மோதிக் கொள்ளவா, நாடு கண்டோம், ஆட்சி அமைத்தோம், சுதந்திர நாதம் கிளப்பினோம்!

இல்லை. ஒரு நாளும் இல்லை. பானிபட் வரக்கூடாது!

ஆனால், இன்று இரு நாடுகளுக்கு மிடையே நடந்துவரும் பேச்சு வார்த்தைகள் அந்த எண்ணத்தைத் தான் உண்டாக்குகின்றன.

இரு நாட்டுப் பிரதமர்களும் மக்கள் மனதிலே அரும்பியுள்ள அச்சத்தை விரட்டவேண்டும்.

சண்டையில்லை, சமாதானம் என்று பறைசாற்றவேண்டும்!

இல்லாவிட்டால், சுகம் இல்லாது சோகப் பாதையில் விரண்டோடும் மக்கள், இந்த தேவையில்லாத யுத்தப் புயலால் சுருண்டு விழுவர்.

இந்தியா, பாகிஸ்தான்—தளிர்களாகக்கூட ஆகவில்லை! தென்றலுந் தாங்காத துளிர்கள் — புயலை வரவேற்றுப் பயன் என்ன? இரு நாட்டுப் பிரதமர்களுக்கும், இதனை காணிக்கையாக்குகிறோம்!

படியளக்கிறர்!

★

“நாதா எங்கே போயிருந்தீர்கள்?”

“படியளக்க!”

“படியளக்கவா? அப்படியென்றல்......?”

“லட்சுமி, கேலிசெய்கிறயா, என்ன? உலகத்திற்கு படியளந்துவிட்டு வருகிறேன்—உணவு தந்து வருகிறேன்”

“அப்படியானல், இந்தச் சிமிழினுள் இருக்கும் எறும்புக்குக் கூடவா?”

“கல்லினுள் தேரைக்கும், கருப்பையுயிர்க்கும் புல்லுணவே தந்து............”

“போதுமே!”

வைகுந்தத்திலே, நேரங்கழித்து வந்த வைகுந்தவாசனைப் பார்த்து லட்சுமி கேட்டாள், பரந்தாமன் சிரித்துக் கொண்டே பதில் சொன்னர்!

சிமிழைத் திறந்தாள் தேவி! எறும்பின் வாயில் அரிசி இருந்தது!!

இப்படிக் காலட்சேப காலங்களில் கேட்டிருப்பீர்கள்.

இதோ, நம்ம படியளக்கும் பெருமாள்! வைகுந்தத்திலே அல்ல—டெல்லியில்!

அவர் படியை கையால் அளப்பதில்லை, வாயாலேயே அளந்து விடுகிறர்!

இந்த இரண்டாவது வனமகோற்சவத்தின் பொழுது அவர் படியளந்து விட்டார்!

சுயதேவை பூர்த்தி மட்டுமல்ல—சுபீட்சமே நமக்கு வந்துவிடப் போகிறது! மிதமிஞ்சி உணவு கிடைக்கப் போகிறது.

எப்போது என்கிறீர்களா? வருகிற ஆண்டில்!

நிச்சயமாகவா? எப்படிச் சொல்ல முடியும். முன்ஷியார் அளித்த வரம்தான் இது!

ஐயோ! அவர் அளித்த வரத்தை அவர் ஆட்களே அழித்து விட்டார்கள்.

அண்மையில் வெளியிட்டுள்ள ஐந்தாண்டு திட்டத்தின் மூலம், முன்ஷியாரின் முகத்திலே கரியைப் பூசி விட்டார்கள்.

இன்னுஞ் சில வருடங்களில் சுய தேவை பூர்த்தித்திட்டம் நிறைவேறி விடும் என்று கருதுவது வீணே. தேவையான உணவுப் பொருள்களை வெளிநாடுகளிலிருந்து வரவழைத்தேயாகவேண்டும்

படியளந்து விட்டேன் என்று பெருமாள் லட்சுமியிடம் கூறும் பொழுது ஆதிசேஷனும், கருடனும், இல்லை, இல்லையென்று சொன்னல், தேவி சிரிக்க மாட்டாளா?

அவர் இருக்கும் மந்திரி சபையாரினல் ஏற்படுத்தப்பட்ட திட்டக் கமிஷன் அறிக்கையில் இப்படி இருக்கிறது!

இன்னுஞ் சில வருடங்கள் உணவு நெருக்கடி இருக்கும் என்கிறது திட்டக் கமிஷன்.

அடுத்த ஆண்டே சுபிட்சம், மிதமிஞ்சிய அளவில் கிடைக்கும் என்கிறர் முன்ஷி!

வெட்கம்! வெட்கம்! யாரிடம் கூறுவது இதை!

* * *

சுபிட்சம் கிடைக்கும் என்று சொன்னரே, சுபிட்சம்வேண்டாம், ஏதாவது தேவைக்கு ஏற்ற அளவு கிடைக்கிறதா என்றல் இல்லை.

அது மட்டுமா? இப்பொழுது அரிசி, கோதுமை இரண்டின் விலையையும் ஏற்றிவிட்டார்கள்.

புழுத்துப் போகிற மையாம் அரிசியொன்றினை, உயர்ந்த அரிசியென்று அதிக விலைக்குக் கொடுத்து வேறு ஏமாற்றுகிறர்கள்.

கோதுமையின் விலையேற்ற மட்டுமல்ல—இரண்டுவித விலைகள் தொழில் பிரதேசங்களில் ஒரு விலை—மற்ற இடங்களுக்கு ஒரு விலை—இதனல் ஏற்படும் தொல்லைகளை அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறர்கள்.

சென்னை சர்க்கார் இதனை எடுத்துக் காட்டியுள்ளது.

கோதுமை உபயோகத்தை சிரமப்பட்டு மக்களிடையே பரப்பி வரும் இந்த சமயத்தில் கோதுமையின் விலையை உயர்த்தியது உசிதமல்ல

இப்படி முகாரி பாடியிருக்கிறது சென்னை டெல்லிநோக்கி!

உணவிலும், கோதுமையை புகுத்தி, தனது ஏகாதிபத்திய திமிரை நிலை நாட்டியிருக்கிறது!

முன்ஷியாரோ, வரந் தருகிறர். அவர் படியளக்கிற இலட்சணம் இப்படி! ஆனலும் அவர் மந்திரி படியளக்கிறர் அவர் என்று வேத பேசுவோரும் இருக்கிறர்கள்!

கருப்புக்கொடி காட்டினர்!

★

ஒரிசா மாகாணத்தைச் சேர்ந்த கட்டாக்கில், தங்கள் கோரிக்கைகளை சர்க்கார் கவனிக்காததால், பள்ளி செல்லாமல், மாணவத் தோழர்கள் மறியல் செய்தனர். அவர்கள், சுகாதார, கல்வி மந்திரி லிங்கராஜ் மஸ்ராவுக்கும், பிரசார மந்திரி, பிரதானுக்கும் உத்திரப் பிரதேசத்துக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பி. என். தாஸுக்கும் கருப்புக் கொடி காட்டினர்.

குளித்தலையில் நிதியளிப்பு

6—8—51-ல்மேதாப்புக்கு கருப்புக்கொடி காட்டி சிறை சென்ற தோழர்கள் வழக்கில் வாதாடி வெற்றிகண்ட தோழர். எம். கை... ஆனந்தர் பி. ஏ., பி. எல். அவர்களுக்கு பொற்கிழியும், பாராட்டும் தோழர் சி. என். அண்ணதுரை அளிப்பார்.

குறிப்பு.- மாநில மாநாட்டு நன்கொடையில் குளித்தலைப் பகுதிக்குரிய தொகையையும் கூட்டத்தில் கொடுக்கப்படும்.

வடார்க்காடு மாவட்டத் தோழர்களுக்கு

வ. ம. எ. பே. மாநாட்டு வரவு செலவு கணக்குகள் முழுதும் தணிக்கை செய்ய தோழர்கள் மு... ரத்தினம், ராமலிங்கம் ஆகியோரிடம் ஒப்புவிக்கப் பட்டுள்ளது. தணிக்கை ரிபோர்ட்டு கிடைத்தவுடன் வரவேற்புக்குழு கூட்டப்படும். அதற்குள்ளாக பாக்கித் தொகைகளை அனுப்பாத தோழர்கள் அனுப்பி வைக்கவேண்டுகிறேன்.

வி. பி. இராசாபாதர்,

வ. கு. தலைவர்.

ஓ. எம். சுப்பிரமணியன்.

தொடர்கதை

யாத்திரை

திலை-வில்லாளன்

[ஓடிய கதை:– சுந்தரம், தன் ல்லூரித் தோழி பத்மாவைக் ாதலித்தான். அவள் பெற்றோ ன் வற்புறுத்தலால் பார்த்திபன் ன்ற வாலிபனை மணந்துகொண் ாள். காதல் தோற்றுவிட்டது. டமை வென்றது. அந்தத் திரு ணத்திற்கு வர முடியாது ாழ்த்து மட்டும் அனுப்பினான் த்மாவின் தங்கை, லீலாவின் ளந்தோழி மங்கை. அவள் வாழ் விலேயும் ஒரு புயல்...தெப்ப உற் வம் பார்க்கச் சென்ற இடத்தில் னகரனைச் சந்தித்தாள். வனே அவளை வஞ்சித்து விட் ான். அதிலிருந்து, வாழ்க்கை ில் வெறுப்புற்று ஆசிரியை ாகவே இருந்துவந்தாள்.

பார்த்திபனை மணந்த பத்மா ன் வாழ்வில் சுந்தர் நினைவால் டுந்துயர் தாங்காமல் தவித்தாள். மேலும்......அவன் வீட்டிலே வேலை செய்து கொண்டிருக்கும் பொன்னியோடு கள்ள நட்பு காண்டிருந்தான். இதனை அறிந் ாள் பத்மா. அது மட்டுமா? தற்கு பார்த்திபனின் தந்தை ும் உடந்தை. ஆகவே அவனை நேரிலேயே கேட்டாள்]

3

அம்மாவுக்கு

பத்மா

என் காதல்மணம் வெற்றி பெற்றி ந்தால் இங்கே ஒரு அரைகுறை டும்பத்துக்காரியும் அங்கே ஒரு ன வெளியை நோக்கிய ழ்க்கையின் பெரும் பகுதியைக் ிக்கும் ஒரு வாலிபனும் இருக்க வண்டியதில்லை. அதுபோல ளிந்து ஒளிந்து காதல் காட்சிகள் டத்தவேண்டிய அவசியம் பொன் ிக்கும், பார்த்திபனுக்கும் ஏற்பட் ாது. எவ்வளவு சிக்கல்......காதல் ்காரத்தின் கனவே சுழற்சி...... ாழ்க்கைச் சூறாவளியின் முறை கட்ட ஆர்பாட்டம்!

இது பொய்யென்று சொல்லிவிட டியாதம்மா. பொன்னியே என் டம் சொல்லிவிட்டாள் எல்லா ண்மைகளையும். அந்த அவசியம் வனுக்கு வந்துவிட்டது. அவள் தாயாகப்போகிறாள். அதுவும் அவரே என்னிடம் உண்மைகளைச் சொல்லிவிடச் சொன்னாராம். நான் ஆவேசங்கொண்டு ஆடவில்லை. அவளை அன்பாகத் தடவிக்கொடுத் தேன். நான் மலடி......அவள் தாய்! இனிப் பொன்னியிடத்துக்கு நான் போகவேண்டுமா? அம்மா, சிந்தித் துப்பார். மலர்க் காட்டினுள் அனுப்பிவிட்டதாகத்தான் நீ நினைக் கிறாய். இல்லை மலக்குழியில்விழுந்து கிடக்கிறேன். தீயின்மீது நடக்கி றேன். வெள்ளத்தில் மூழ்குகிறேன் வேதனை தாயே, வேதனை, தாங்க முடியாத வேதனை!

ஏழை மிக எளிதில் இன்பத்தை யடைந்துவிட முடியும். இரண்டு டத் தில் வேலை செய்து வயிற்றுக்கு சோறும், உடலுக்கு ஒரு கிழிந்த கந்தலும் பெற்றுவிடுகிறான். பிறகு அவனுக்குக் கவலையில்லை. கண்ட இடத்தில் கையே தலையணையாக்கி தனது கட்டாந்தரை பஞ்சணையில் நிம்மதியாகத் தூங்கிவிடுகிறான். அவனுக்கு ஒரு மனைவி இருந்தால் அவளும் அவன் பக்கத்தில் வந்து படுத்துவிடுகிறாள். அவர்கள் உல கத்தை அந்த அளவிற்குத்தான் மதிக்கிறார்கள். அதற்குமேல் அதற்கு கௌரவம் கொடுக்கவிரும்பவில்லை. ஆனால் பணக்காரன் பகலில் கொடுத்த கடனை வாங்குவதிலும், புதிய கடன் கொடுத்து அதிக வட்டி கேட்பதி லும் காலத்தைக் கழித்துவிட்டு இரவில் இரும்புப் பெட்டியடியில் படுத்துக்கொண்டு எலியோடினா லும், பூனையோடினாலும் 'திருடன் திருடன்......' என்று உளறியடித் துக்கொண்டு எழுந்திருப்பான். அவ னுக்கு டாக்டரிடம் நம்பிக்கையிருப்ப தில்லை. தன்மீதே நம்பிக்கை இல்லா மல் ஒருநாளைக்கு மூன்று தடவை கள் பணத்தை எண்ணுவான். அவ னுக்கு நிம்மதியிருப்பதில்லை. மன அமைதியிருப்பதில்லை. அவனுக்கு சுகம் எப்படிக்கிடைக்கும்'........ இப்படிச்சிலர் பேசுவார்கள். ஆனால் பொருளியல் புரட்சி வீரர்கள் இந்த விளக்கத்தை வடிகட்டின அயோக் கியத்தனம், பொருக்கியெடுத்தப் பித்தலாட்டம் என்று கூறுவார் கள். ஏழை, ஏழையாகவே இருக்க வும், பணக்காரன் பணக்காரனாகப் பெருகவும் செய்யக் கையாளப்படும் சூழ்ச்சி இது என்பார்கள். அதுவப் படியேபோகட்டும். பொன்னிசுகம் அனுபவிக்கிறாள். நான் சோகப்படுக் கையிலே கிடந்து தவிக்கிறேன். அவள் வாடாமல்லிகை. நான் கசக்கி யெறியப்பட்ட குண்டுமல்லி!

பொன்னியின் தாய் மங்களம் தான் கைக்குழந்தையுடன் அங்கு வந்த நாளிலிருந்து அவள் கடைசி மூச்சு நிற்கிறவரை அந்த வீட்டின் வேலைக்காரியாய் இருந்தாளாம். அவள் சாகும் பொழுது பொன்னி பத்துவயதுச் சிறுமி. என் மாமி அன்னம்மாவுக்கு ஒரே ஆண் குழந்தை. பெண்குழந்தை வேண்டு மென்று தவமியற்றினாள். பிறக்க வில்லை. ஆகவே பொன்னியைத் தான் வளர்ப்பதாக ஏற்றுக்கொண் டாள். சிறுவயது முதற்கொண்டு அவரும் அவளும் சேர்ந்து விளை யாடுவார்களாம். பிறகு இருவரும் ஒருவரை யொருவர் பிரிந்து வாழ்வ தில்லை யென்று சத்தியம் செய்து கொண்டனராம். அன்னம்மா இறந் தவுடன் பொன்னியின்மீது அடக்கு முறை பாய்ந்ததாம். என் மாமனார் அவளது திருமணத்திலேயே கைவைத்து விட்டாராம். வீட்டுச் சமையல் வேலை அவளிடம் ஒப் படைக்கப்பட்டதாம். ஆனாலும் பார்த்திபனின் அன்பிருக்கும்

பொழுது அவள் அடிமை வேலை செய்யவும் அஞ்சவில்லையாம். இந்த நிலைமையில் தானம்மா, அவரது தந்தை நம் வீட்டிற்கு வந்து பெண் கேட்டார், கொஞ்சமும் சிந்தனைக்கு வேலை கொடுக்காமல் சம்மதம் அளித்து விட்டீர்கள். இப்பொழுது சங்கடசகடத்தில் மாட்டித் தவிக்கிறேன் நான்.

அவர்கள் வீட்டில் ஒரு பெரிய போர் நடந்திருக்கிறது. ஆம், அவர் பிடிவாதமாகத் திருமணம் வேண்டாம் என்று மறுத்திருக்கிறார். என் மாமா எவ்வளவு கேட்டும் சொல்லவேயில்லை. தக்க காரணங்கள் காட்டவில்லை. கடைசியில் பொன்னியே அந்தப் பொறுப்பை யேற்றிருக்கிறாள். பெண் அடக்கத்தின் பிறப்பிடம் கொஞ்சம் பதட்டம் ஏற்பட்டுவிட்டால் அதன்தீவிர எல்லையும் அவளே! கிழவர் திணறிப் போய்விட்டாராம். அவள் அழைத்து பொன்னி சொல்வது உண்மைதானு என்று நேரடியாகக் கேட்டாராம். அந்தக் கோழை அப்பொழுதுதான் உண்மையை ஒப்புக் கொண்டார்.

"அடபாவி......பொன்னி என் மகள்போல, அவளை எப்படியடா மணப்பது?"

"போலதானே அப்பா..." ஆத்திரத்திலும் அவர் சிரித்தார்.

"அவள் தாழ்ந்த குலம்......நான் ஏற்கமுடியாது!" கிழவர் புதிய காரணம் கண்டு பிடித்தார்.

"அவள் நம்வீட்டிலெந்த தாழ்ந்த நிலைமையிலும் இல்லையே! நம்மைப் போலவேதான் வாழ்கிறாள்'

"அதுதான் நான் செய்த தவறு ...வேலை செய்யவந்த நாயைக்கூடத்திலே குந்தவைத்ததின் கோளாறு இப்பொழுது தெரிகிறது" கிழவர் சீறினார்.

படாரெனக் கதவுகளைத் திறந்து கொண்டு அந்த அறையினுள் நுழைந்தாள். சிவனை எதிர்த்து நிற்கும் சக்தியின் சிலையைச் செய்த சிற்பிக்கு ஒரு அனுமான உருவாக இருந்தாள் அவள்.

"என்னால் உங்கள் குடும்பத்தில் போர் வேண்டாம்.......வேலை செய்ய வந்தவளின்மகள்தான் பொன்னி...ஆனாலும் அவளுக்கும்இதயம் இருக்கிறது என்பதை மறக்கவேண்டாம்! நான் அவரைக் காதலித்தேன் —அவரும் அப்படியே! உங்கள் சாதி யாணவம் தடுத்தால், பணவீக்கம் குறுக்கிட்டால், விருப்பம்போல் செய்யுங்கள். நான் கன்னியாகவே இருந்து என் கடைசி மூச்சுவரை என் அன்பருக்குத் தொண்டு செய்து மடிவேன்" என்று குட்டிப் பிரசங்கம் செய்து விட்டாள் அந்த துடுக்குக்கார குட்டி.

கிழவர் திகைத்தார், நின்றார், பிறகு போய் விட்டார்.

அவர் விடாப்பிடியாக இருந்து எங்கள் திருமணத்தை நடத்திவைத்தார். அவரும் தந்தையின் அதட்டுங்குரலுக்கு அடங்கிநடந்துகொண்டார். பொன்னியும் திருமணத்தில் முழுமனதுடன் ஒத்துழைத்தாள். அந்த விசித்திர நிகழ்ச்சிக்கு தக்க காரணம் இப்பொழுது தெரிகிறதா?

பழமை, புதுமை...... இரண்டு சக்திகள்.

பலர் பழமை விரும்பிகள், சிலரே புதுமையை வரவேற்கிறார்கள். என் மாமனார் பழமைக்குப் பரிந்து பேசுபவர். கட்டுக் கட்டாக திருநீற்றை அணிந்து கொண்டு தேவாரம், திருவாசகம் பாடுபவர். அருட்பா அவர் இதயத்தைத் தொடும்; அருணகிரியார் அவருக்கு அறிமுகமானவரிலே முதல்வர்; சிவன் கோவில் ஒன்று கட்டி முடித்திருக்கிறார். இரண்டு ஆலயங்களுக்கு அவர் டிரஸ்டி; ஒரு சத்திரத்து நிர்வாக உறுப்பினர் பக்திமான். பாசுரம் ஓதியே தன் பாவங்களைப் போக்கிக் கொண்டிருக்கிற ஒரு பரமபக்தசிரோன்மணி, அவர் 'நவீன' நாயன்மார்; சைவக்குரவர்களில் ஒருவராக இணைப்பதானாலும் எதிர்ப்பில்லை. அவர் எவ்வளவு புண்ணிய காரியத்தைச் செய்வார்! பழமைக்குப் பரிந்து பேசுபவர் அந்தக் காலத்தில் கேடுகள் ஏதுமில்லை. கெடுமதியாளர், சூதுமதியினர், துரோக நெஞ்சினர், வஞ்சக வாழ்வினர் யாருமே இல்லையென்பர். காலங் கெட்டு விட்டது என்று பெருமூச்செறிவர். ஆனால் அந்தக்காலத்துப் புராணங்கள், ஏடுகள் புகட்டும் பொல்லாங்கைப் பற்றிப் பேசமாட்டார்கள். இந்தக்காலம் கெட்டது என்று ஏன் சொல்கிறார்களோ நமக்குப் புரியவில்லை. விஞ்ஞானம் விளைத்த அத்தனை உதவிகளையும் அனுபவித்துக் கொண்டு பேசுகிறார்கள். விஞ்ஞானம் தந்த புகைவண்டியிலேறி, 'பிளஷர் காரில்' நிலயத்திற்குச் சென்று வானொலியிலே இந்த புதுமை எதிர்ப்பை நடத்துகிறார்கள். பழமை நெளிந்து செல்லும் நாகப்பாம்பு; அதன் விஷம் தலையாகிய ஒரு இடத்தில் மட்டுமில்லை. அது தொடுகிற இடத்திலெல்லாம் வழிந்தோடுகிறது. இதற்கு என் மாமாவே சாட்சி!

(தொடரும்)

வெளி வந்துவிட்டது!

விலை ரூபாய் ஒன்றேகால்

திராவிடன் பதிப்பகம்,

(A) த. பெ. எண் 18, வேலூர் (N. A.)

"தேனி"

★

தேர்தல் ஒத்திகை!

'தேனி' திருவிளையாடல், காங்கிரசின் தேர்தல் படையமைப்பின் முன்னறிவிப்பு. அவர்கள் பலாத்காரத்தையும் மிருகபலத்தையும் தேர்தலில் உபயோகிக்கத் தயங்கமாட்டார்கள். ஏனெனில் போலீசும், மேஜிஸ்ட்ரேட்டும் எங்கே சஸ்பெண்ட் உத்தரவு வந்துவிடுகிறதோ என்ற பயத்தால் அவர்கள் வெறியாட்டத்தில் தலையிடமாட்டார்கள் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்!

சென்னை சர்க்கார், தேனி சம்பவத்தில் தாங்கள் ஓரவஞ்சனையாக நடந்துகொள்ளவில்லையென்று கிரட்டிக்கொள்ள விரும்பினால், அதிகாரிகளல்லாத பொது விசாரணைக்குழு அமைக்கட்டும். அதில், உத்தியோகப் பற்றற்ற சுதந்திர நடர்களையே உறுப்பினராக்கி, அவர்கள், 'தேனி' முழுசம்பவத்தைப் பற்றி விசாரிக்கட்டும்.

அந்த ஒரு வழியின்மூலம்தான் பொதுமக்களுக்கு, தாங்கள் ஒருதலையாக நடந்து கொள்ளவில்லையென்று உறுதியளிக்கமுடியும். இந்திய ஜனதிபதி, இது விஷயத்தில் கவனம் செலுத்துவாரென்று நம்புகிறோம். மக்களின் உரிமைக்களஞ்சியம் அவரேயாகையில், இதற்கு தக்கநடவடிக்கை எடுப்பார் என எதிர்பார்க்கிறோம்.

—'சண்டே அப்சர்வர்'

ஜாரின் கொடுமை!

தேனி சம்பவம் விஷயமாக காங்கிரஸ்காரர்களும், காங்கிரஸ் ஆட்சியும் நடந்துகொள்கிற முறையானது ரஷ்யா ஜார் ஆட்சியையும் ஜெர்மன் ஹிட்லர் ஆட்சியையும் மிஞ்சக் கூடியது.

காங்கிரசும், காங்கிரஸ் ஆட்சியும் மறைந்து அழிந்தாலொழிய திராவிட நாட்டுக்கோ, திராவிட மக்களுக்கோ மானமுள்ள, யோக்கியமான வாழ்க்கைக்கு இடமே

சர். தியாகராய கல்லூரி உதவி நிதிக்காக

வண்ணாரப்பேட்டை தியாகராய கல்லூரி மைதானத்தில்
அமைந்துள்ள தியாகராயர் மண்டபத்தில்

10—8—51 முதல் 23—8—51 வரை

இசை, நாடக, நடன விழா

இசை விருந்து:
10—8—51 திரு. எம். கே. தியாகராஜபாகவதர் தம் குழுவினருடன்.

நாடகங்கள்:
11—8—51 வரதட்சணை — திரு பி. ஆர். பந்துலு, திரு. கே. சாரங்கபாணி தம் குழுவினருடன்.
12—8—51 நாம் இருவர்—டி. ஆர். மகாலிங்கம் தம் குழுவினருடன்.
13—8—51 நீதிதேவன் மயக்கம்—சி. என். அண்ணாதுரை தம் குழுவினருடன்.
14—8—51 சந்திரமோகன்—சி. என். அண்ணாதுரை தம் குழுவினருடன்.
15—8—51 மனிதனும் மிருகமும் — திரு. எஸ். டி. சுந்தரம், திரு. கே. சாரங்கபாணி தம் குழுவினருடன்.
16—8—51 வேலைக்காரி — திரு. கே. ஆர். ராமசாமி தம் குழுவினருடன்.
17—8—51 ஓர் இரவு ,,
18—8—51 மனோகரா ,,
19—8—51 மனிதன் — திரு. டி. கே. எஸ். சகோதரர்கள் தம் குழுவினருடன்.
20—8—51 ஔவையார் ,,
21—8—51 இன்ஸ்பெக்டர் ,,
22—8—51 சந்தர்ப்பவாதி — வாணி பயின் ஆர்ட் அகாடமியாரால்,

நடனம்:
23—8—51 நிருத்திய சிற்பி உஷா தேவியார்.

நுழைவுக் கட்டணம்:
நன்கொடையாளர்: முதல் வகுப்பு ரூ. **100** 2-வது வகுப்பு ரூ. **50**
சீசன் டிக்கட்டு: முதல் வகுப்பு ரூ. **30** 2-வகுப்பு ரூ. **20** 3-வகுப்பு ரூ. **15** 4-வகுப்பு ரூ. **10**
தினசரி: ரூ. **3, 2, 1** அணா **8.**

கல்லூரியிலேயே டிக்கட்டுகள் கிடைக்கும்

இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர், அமைப்பாளர், சர். தியாகராயர் கல்லூரி நிதிக்குழு.

கிடையாது என்பதையே தேனி விஷயத்தில் சர்க்கார் நடந்து கொள்ளும் தன்மை நமக்கு தெளிவு படுத்துகிறது.

—'விடுதலை'

தண்டனை தருக!

எந்தக் கட்சிக்காரருக்கும் கூட்டம் போடவோ, கொள்கைகளை எடுத்துக் கூறவோ பிறகட்சிகளிலுள்ள குறைகளை மக்கள் மன்றத்தில் வைக்கவோ, உரிமை உண்டு.

அதற்காக ஒரு கட்சிக் கூட்டம் நடத்தும் இடத்தில் அதே இடத்தில் அதே நாளில் மாற்றுக் கட்சிகள் கூட்டம் நடத்த எண்ணுவது சுண்ணிய மாகாது. கலக நோக்கமில்லாத எந்த பொறுப்புள்ள கட்சிக்காரரும் மாற்றுக் கட்சியினர் நடத்தும் கூட்ட நேரத்திலேயே தன்னுடைய கட்சிக் கூட்டமும் நடத்த முயலமாட்டார்கள். அப்படி முயலும் அந்தச் செய்கையே கெட்ட எண்ணத்தையும் கீழ்த்தரப் போக்கையும் காட்டுவதாகும்.

ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் பிறிதொரு கூட்டம் நடத்த பிடிவாதமாக இருப்பதென்றால் வலுச் சண்டைக்கு வரிந்து கட்டி வந்ததாகவே மதிக்கப்படும். கெட்ட எண்ணத்தையும், கேடான செயலுக்கான திட்டமிட்டிருப்பதையும் காட்டுவதாகவே ஆகும்.

கலகம் செய்ய வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக பொதுக் கூட்டம் என்ற பெயரைப் பயன் படுத்துவதென்றால் எந்தக் கட்சியிலும் சரியே, எத்தகைய பட்டம் பதவி கட்டித் தழுவியவராயினும் சரியே, அவர் தன்னிடமுள்ள மிருகத்தனத்திற்கு இடமளித்து மனிதத்தன்மையை இழந்தவராவதோடு கண்டனத்திற்கும், சர்க்கார் தண்டனைகளுக்கும் ஆளாக வேண்டியவராவார்.

'சங்குநாதம்'

✲

சமுக சீர்திருத்த மாநாடு

ஈரோடு பார்க்ரோடில் அமைந்துள்ள அர்ச்சுனன் பந்தலில்

1951 ஆகஸ்டு 5-ல்

திருச்சி லோகநாதன் இன்னிசையுடன் துவங்கும்

T. N. Paran
News Age
Kulital

தலைவர்:
ஏ. கே. வேலன்

திறப்பாளர்:
பு. உ. சண்முகம்

பொதுச் செயலாளர் சி. என். ஏ. கலந்து கொள்வார்.

அறிஞர் கா. அப்பாதுரை, நாரண- துரைக்கண்ணன், இரா. நெடுஞ்செழியன், ஈ. வே கி. சம்பத், மு. கருணாநிதி, என். வி. நடராசன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சி. பி. சிற்றரசு, கி. மனோகரன், கே. ஆர். இராமசாமி, காஞ்சி. கல்யாணசுந்தரம், கே. ஏ. மதியழகன், என். எஸ். இளங்கோ, அரங்கண்ணல், தில்லை-வில்லாளன் பேசுவர்.

இரவு
சந்திரமோகன்
நாடகம்

எஸ். ஆர். சந்தானம்
வ. கு. தலைவர்

எஸ். அப்பாவு
இரா. பெருமாள்
செயலாளர்கள்

கட்டணம்:

வரவேற்பாளர்	ரூ. 5
பிரதிநிதி	ரூ. 2
பார்வையாளர்	ரூ. 1.
பெண்களுக்கு	அணா 8

Edited, Printed & Published by C. N. Annadurai M. A. at "DravidaNadu" Press